06.10.2023
O.S.No.496/2012

வா.சா.1.திரு.ஆறுமுகம் த.பெ.கிருஷ்ணன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**5ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் மதுரை மாநகராட்சி அலுவலகத்தில் வருவாய் உதவியாளராக பணியாற்றி வருகிறேன். தாவா சொத்தின் சர்வே எண்.15/2 ஆகும். தாவா சொத்தின் கிழக்கு பக்கம்ரோடு உள்ளது, அந்த ரோடு போடுவதற்கு முன்பாக அந்த இடத்தில் என்ன இருந்தது என்று எனக்கு தெரியாது. நான் 2008ம் ஆண்டு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்ட போது தாவா சொத்தின் கீழ்புறம் ரோடு இருந்ததா என்றால் 'L' வடிவ ரோடு இருந்தது. தாவாசொத்தின் அருகில் தேசிய நெடுஞ்சாலை பாலம் செல்கிறது என்றால் 2008ம் ஆண்டு கிடையாது, தற்போதுதான் போடப்பட்டுள்ளது. 2008ம் ஆண்டு தாவா சொத்தின் அமைப்புகள் எனக்கு தெரியாது என்றால் எனக்கு ஞாபகத்தில் இல்லை. தாவா சொத்தின் முன் பாத்தியஸ்தர் அங்கமுத்து என்பவரை எனக்கு எவ்வாறு தெரியும் என்றோ, அவர் தாவாசொத்தை கிரையம் கொடுக்க இருப்பதாக எனக்கு எவ்வாறு தெரியும் என்றோ எனது பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. 18.01.2008 தேதியில் நான் அங்கமுத்துவுடன் தாவா சொத்தை பொறுத்து ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தமானது அந்த கால கட்டங்களில் அங்கமுத்துவின் குடும்ப உறுப்பினர்களான இந்த பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றால் சரிதான். 18.01.2008ம் ஆண்டு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு அன்றைய தேதியிலேயே முன் தொகையாக நான் ரூபாய்.50,000/-ஐ செலுத்தி விட்டேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் மதிப்பை எவ்வாறு நான் முடிவு செய்தேன் என்றால் சந்தைமதிப்பின் படி அங்கமுத்து தாவா சொத்து ரூபாய் 1,50,000/-ஐக்கு விலைக்கு போவதாக சொல்வதால் எங்களுக்குள் பேசி முடிவு செய்து, மொத்த கிரைய தொகை ரூபாய்.75,000/- என நிர்ணயம் செய்தோம். கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே எனக்கும், அங்கமுத்துவிற்கும் இடையே மேற்படி கிரையம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்று 18.01.2008 அன்று கிரைய தொகை ரூபாய்.75,000/- என நிர்ணயம் செய்து கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

3. கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட அன்று முன்தொகை கொடுத்து கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று தான் நான் அங்கமுத்துவை பார்த்தேன். தாவா கிரைய ஒப்பந்தம் வா.சா.ஆ-3 ஆவணம் யாரால் தயார் செய்யப்பட்டது என்றால் நான்தான் எனது பெயரில் பத்திரம் வாங்கி சென்றேன், மற்ற விவரங்கள் எல்லாம் அங்கமுத்து கூறுவதாக சொல்லி என்னை அங்கு அழைத்தார். நான் அங்கு சென்ற உடன், நான் வாங்கி சென்ற பத்திரத்தை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. எனது விலாசத்தை பெற்றுக்கொண்டார். எங்கள் இருவர் முன்னிலையில் தான் பத்திரம் தயார் செய்யப்பட்டது. எத்தனை பத்திரம் அங்கமுத்து வைத்திருந்தார் என்றால் 3 பத்திரம் இருந்ததாக எனக்கு ஞாபகம், என்னிடம் தயார் செய்யப்பட்ட ஒரு பத்திரத்தை

கொடுத்தார். 3 பத்திரத்திலும் என்னிடம் கையெழுத்து வாங்கினார், அதைதான் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

4. அங்கமுத்து வாங்கிய பத்திரம் அவர் பெயரில்தான் வாங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் நான் எங்கு வைத்து கையொப்பம் வைத்தேன் என்றால் தல்லாகுளத்தில் உள்ள பத்திரம் எழுதும் இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். அந்த பத்திரம் எழுதப்பட்ட போது எனது தரப்பில் நான் யாரையும் கூட்டி செல்லவில்லை, நான் மட்டும்தான் சென்றேன். ஆகையால் தாவா கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பம் இட்டவர்கள் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அங்கமுத்துவிற்கு தாவா சொத்து பாகபிரிவினைபடி கிடைத்தது என்று எனக்கு எவ்வாறு தெரிய வந்தது என்றால் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு முன்பே அங்கமுத்து என்னிடம் தாவா சொத்து தனக்கு பாகபிரிவினை படி ஒதுக்கப்பட்டது என கூறினார், நாங்கள் வில்லங்கம் போட்டு பார்த்தோம்.

5. அங்கமுத்து என்னிடம் 1995 ம் வருட அசல் பத்திரமும், 1927 ம் வருட அசல் பத்திரமும் என்னிடம் கொடுத்தார். தாவா கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்ததப்பட்ட பின்பு அங்கமுத்து அதில் நோட்டரி வழக்கறிஞரிடம் கையொப்பம் பெற்று வந்தார். அப்போது அவருடன் நான் செல்லவில்லை, மற்ற சாட்சிகளும் அவருடன்செல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அதில் கையொப்பம் செய்த நோட்டரி வழக்கறிஞர் எங்கு உள்ளார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நோட்டரி வழக்கறிஞரிடம் கையொப்பம் வாங்கி வந்த பின்புதான் நான் கிரைய ஒப்பந்தத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல, அதற்கு முன்பு நான் கையொப்பம் செய்தேன். அங்கமுத்து கையொப்பம் செய்த பின்பு நான் கையொப்பம் செய்தேன். சாட்சிகள் கையொப்பம் செய்தது எனக்கு ஞாபகம் இல்லை. (குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)